இக்காணி, உரிமம்பெற்ற நிலஅளவையாளர் என். விஜேவீர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1982.06.02 ஆந் திகதிய 2068 ஆம் இலக்க வரைபடத்தில் இப்பொழுது குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

4-355/2

---

## இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''மாத்தறையைச் சேர்ந்த தெல்மடுவ ஆராச்சிகே வசந்த சந்திரசிறி என்பவர், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட் சார்பில் மாத்தறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டீ. ஆர். திஸ்குமார என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, யூன் 27 ஆந் திகதிய 1547 ஆம் இலக்கம் கொண்ட ஈட்டுமுறிகள் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராத லாலும், 2008, நவெம்பர் 30 ஆந் திகதின்றுள்ளவாறாக பதினான்கு இலட்சத்து நாற்பத்தையாயிரத்து அறுநூற்றுத்தொண்ணூற்றெட்டு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 14,45,698.52) கொண்ட தொகையும் 2008, திசெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை பதினான்கு இலட்சத்து நாற்பத்தையாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்றெட்டு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 14,45,698.52) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு வீத (36%) வட்டியும் சொல்லப்பட்ட முறிமீது சொல்லப்பட்ட தெல்மடுவ ஆராச்சிகே வசந்த சந்திரசிறி என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக் கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனை களுக்கிணங்க இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து பதினான்கு இலட்சத்து நாற்பத்தையாயிரத்து அறுநூற்றுத்தொண்ணூற்றெட்டு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 14,45,698.52) கொண்ட தொகையும் 2008, திசெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை பதினான்கு இலட்சத்து நாற்பத்தையாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்றெட்டு ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 14,45,698.52) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு முப்பத்தாறு வீத (36%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 1547 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாமும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. காமினி தியாவ அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 1547 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், காலி மாவட்டத்திலுள்ள தல்பே பத்துவில் அண்டுகொடவில் அமைந்துள்ளதும், அதன் மீதுள்ள மண், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் எத்தடிஹேனவத்த எனவழைக்கப்படும் காணியின் காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கில் : அறலியகஹாவத்த ; கிழக்கில் : அதே காணியின் காணித்துண்டம் 1 ; தெற்கில் : அதே

காணியின் காணித்துண்டம் 3 ; மற்றும் மேற்கில் : கொடேல்ல. பரப்பளவில் இது, ஒரு ஏக்கர் இரண்டு றூட் ஆறு பேர்ச்சுக்களை (1ஏ. 2றூ. 6பே.) கொண்டுள்ளதுடன், காலி மாவட்டக் காணிப்பதிவ கத்தில் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

மேற்கூறப்பட்ட காணித்துண்டு அண்மைக் காலத்திய நிலஅளவை வரைபடத்தின்படி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது :

தென் மாகாணம், காலி மாவட்டத்திலுள்ள தல்பேயில் அங்குகொடவில் அமைந்துள்ளதும், எத்தடிஹேன எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எம். எல். எம். ரஸ்மி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.12.31 ஆந் திகதிய 287 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கில் : அறலியகஹாவத்த ; கிழக்கில் : இப்பாவெலவிலிருந்து அண்டுகொட வரையிலான வீதி (கி.ச.) ; தெற்கில் : அதே காணியின் காணித்துண்டம் 3 ; மற்றும் மேற்கில் : கொடேல்ல. பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 287 ஆம் இலக்க வரைபடத்தின்படி, ஒரு ஏக்கர் இரண்டு றூட் ஆறு பேர்ச்சுக்களைக் கொண்டுள்ளது.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்.

இ. அ. நி.கூ. வர்த்தன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

4-355/3

---

## இ. அ. நி. கூ. வங்கி

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"நியூ ஹொரண பேக்கரி" என்ற பெயர் மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் தனியுரிமையாளராகத் தொழில் கொண்டு நடாத்துகின்ற ஹொரணையைச் சேர்ந்த நாணயக்கார வன்னி ஆராச்சிகே யெனில் குமார் என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் பிரசித்த நொத்தாரிசு டீ. எம். பீ. சீ. குணதிலக்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002, ஓகத்து 29 ஆந் திகதிய 1258 ஆம் இலக்கங்கொண்ட ஆரம்ப ஈட்டுமுறியின் மீதும் பிரசித்த நொத்தாரிசு எஸ். டீ. என். எஸ். கன்னங்கர என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, செத்தெம்பர் 30 ஆந் திகதிய 11 ஆம் இலக்க இரண்டாம்நிலை ஈட்டுமுறியின் மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளராதலாலும் மேற்கூறப்பட்ட 1258 ஆம், 11 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது 2008, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஏழு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து எழுபத்தைந்து ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூ. 7,29,075.38) கொண்ட தொகையும் 2008, நவெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஐந்து இலட்சத்து இருபத்துமூவாயிரத்து நூற்றைம்பத்தேழு ரூபா எண்பத்துநான்கு சதம் (ரூ. 5,23,157.84) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு பதினான்கு சதவீத (14%) வட்டியும், ஒரு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்துநாற்பது ரூபா (ரூ. 1,49,940) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலை நாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சளபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீதத்தில் (7%) கணக்கிடப்பட்ட வட்டியும், சொல்லப்பட்ட வன்னிஆராச்சிகே யெனில் குமார் என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாத லாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஏழு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து எழுபத்தைந்து ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூ. 7,29,075.38) கொண்ட தொகையை 2008, நவெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஐந்து இலட்சத்து இருபத்துமூவாயிரத்து நூற்றைம்பத்தேழு ரூபா எண்பத்துநான்கு சதம் (ரூ. 5,23,157.84) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு பதினான்கு சதவீத (14%) வட்டியும், ஒரு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்துநாற்பது ரூபா (ரூ. 1,49,940) கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலை நாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சளபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீதத்தில் (7%) கணக்கிடப்பட்ட வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 1258 ஆம், 11 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**1258 ஆம், 11 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில் ராய்கம் கோறளையின் கும்புக்க பத்துவில் ஹொரண நகரசபை எல்லைகளினுள் சுதேரிஸ் சில்வா மாவத்தையில் அமைந்துள்ளதும், ராலஹாமிலாகே வத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் சேனக்க விதாரணகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000, திசெம்பர் 16 ஆந் திகதிய 2207 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் ஏ என அடையாளமிடப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான அக்காணித் துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் ஏ பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கில் : சொல்லப்பட்ட 280 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் எஸ் 13 (முன்னர் 20 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கிடம், தற்போது சுதேரிஸ் சில்வா மாவத்தை) ; கிழக்கில் : சொல்லப்பட்ட 2207 ஆம் இலகக் வரைபடத்திலுள்ள காணித்துண்டம் பீ (வரிமதிப்பிலக்கம் 43, சுதேரிஸ் சில்வா மாவத்தை) ; தெற்கில் : ராலஹாமிலாகே வத்தவின் காணித்துண்டம் ரீ (தற்போது அங்குருவாத்தொட்ட வீதியில் 105அ என்னும் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவுகள்) ; மற்றும் மேற்கில் : 280 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் எஸ் 7 (தற்போது அங்குருவாத்தொட்ட வீதியில் 105அ என்னும் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவுகள் ; பரப்பளவில் இது, 43ஏ, 45, 47, 47ஏ மற்றும் 47பீ என்னும் இலக்கங்களைக் கொண்ட கட்டிடத்துடனும் அதன் மீதுள்ளதும் அதனோடிணைந்துள்ளதுமான எல்லாவற்றுடனும், பன்னிரண்டு தசம் ஐந்து சைபர் பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 12.50பே.) (316, 161 ச. மீற்றர்களைக்) கொண்டுள்ளதுடன், பாணந்துறை மாவட்டக் காணிப்பதிவக அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

எல்லா மற்றும் தனியான உரிமைகளுடனும் வழிகளுடனும் அனுகூலங்களுடனும் துணைப் பொருட்களுடனும் அல்லது அவற்றோடு வழமையாக வைத்திருக்கப்பட்ட, பயன்படுத்தப்பட்ட அல்லது துய்க்கப்பட்ட அந்த உரிமைகளுடனும் வழிகளுடனும் அனுகூலங் களுடனும், துணைப்பொருட்களுடனும், இதன்கீழ் குறிப்பாக விவரிக்கப்பட்ட வீதி வழியில் அல்லது அது நெடுகிலும் அல்லது அதன்மேல் பாரமேற்றப்பட்ட அல்லது பாரமேற்றப்படாத குதிரைகள், கால்நடைகள் அல்லது வேறு விலங்குகள், மோட்டார் கார்கள், மோட்டார் லொறிகள் மற்றும் ஒவ்வொரு வகையினதுமான வேறு வாகனங்கள் என்பவற்றுடனோ அல்லது அவையின்றியோ எத்தகைய எம்முறையிலேனும் கால்நடை மூலம் அல்லது வேறு வகையாகச் செல்வதற்கும் திரும்புவதற்கும் கடந்துசெல்வதற்கும், மீண்டும் கடந்து செல்வதற்கும் ஈடுவைப்பவர், அவரது வருகையாளர்கள், பொறியியலாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், கட்டிடக் கலைஞர்கள், வேலையாட்கள், சேவையாளர்கள், வாடகைக் குடியிருப்பாளர்கள், உரிமம்பெற்றவர்கள் மற்றும் அதிதிகள், இரவில் அல்லது பகலில் எத்தகையனவுமான எந்நோக்கங்களுக்காகவும் அவர்களின் விருப்பத்தின்படி இதன் பின்னர் எல்லா நேரங்களிலும் இடையறாது உட்செல்வதற்கும் வெளிச்செல்வதற்கும் சென்றுவருவதற்குமான வழிக்கும் செல்வழிக்குமான முழுமையான கட்டற்ற உரிமையும் சுதந்திரமும் உரிமமும் ; அத்துடன் தற்போது சுதேரிஸ் சில்வா மாவத்தையாகவுள்ள உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டீ. ஆர். நாணயக்கார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1968.01.20 ஆந் திகதிய 280 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டம் இல. எஸ். 13 இன் மீதும் அதிலும் ; அத்துடன்/அல்லது அதுநெடுகிலும் மின்சார வடங்களை மற்றும் மேந்தலைக் கம்பிகளை அத்துடன் வடிகாலமைப்பு, வாயு மற்றும் நீர்க்குழாய்களையும் உபகரணங்களையும் எத்தகைய வகையினவையுமான ஏனைய உபாயங்களையும் இடுவதற்கான முழுமையான, கட்டற்ற உரிமையும் சுதந்திரமும்.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

4-355/4

---

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"இங்கிரியவைச் சேர்ந்த மஹாமெஸ்ரிகே மெல்வின் சராஜ் ஸ்ரீ சாந்திரத்ன சில்வா மறுபெயர் மஹாமெஸ்திரிகே மெல்வின் சரத் ஷாந்த டிராஜ் சில்வா என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். டீ. என். எஸ். கன்னங்கர என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, செத்தெம்பர் 9 ஆந் திகதிய 167 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளராதலாலும் மேற்கூறப்பட்ட 167 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது 2008, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக பத்து இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து எண்ணூற்றிருபத்தெட்டு ரூபா பதினேழு சதம் (ரூ. 10,38,828.17) கொண்ட தொகையும் 2008, நவெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆறு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்துதொண்ணூற்றிரண்டு ரூபா (ரூ. 6,39,992) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலை நாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டு சதவீத (8%) வட்டியும், சொல்லப்பட்ட மஹாமெஸ்திரிகே மெல்வின் சராஜ் ஸ்ரீ சாந்திரத்ன சில்வா மறுபெயர் மஹாமெஸ்ரிகே மெல்வின் சரத் ஷாந்த டிராஜ் சில்வா என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட

தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து பத்து இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து எண்ணூற்றிருபத்தெட்டு ரூபா பதினேழு சதம் (ரூ. 10,38,828.17) கொண்ட தொகையும் 2008, நவெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆறு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றிரண்டு ரூபா (ரூ. 6,39,992) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியினால் வாராந்த அடிப்படையில் வெளியிடப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி, ஏப்பிறல், யூலை, ஒற்றோபர் ஆகிய மாதங்களின் முதலாவது வேலை நாளன்று மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு எட்டு சதவீத (8%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 167 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 167 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்திலுள்ள ராய்கம் கோறளையின் உடகஹா பத்துவிலுள்ள நம்பபாணவில் அமைந்துள்ளதும், மீகஹாவத்தவில் தென்மெற்கு எல்லையிலுள்ள காணித்துண்டொன்றென அழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. காமினி விஜேசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.03.21 ஆந் திகதிய 2416 ஆம் இலக்க வரைபடதத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 15சீ என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டு பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கில் : ஜீ. ரனேபுரவினாலும் ஏனையோரினாலும் உரிமைகோரப்பட்ட பணுகல்-கொடெல்லவத்த ; கிழக்கில் : 4646 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 14 என அடையாளமிடப்பட்ட வீதி ; தெற்கில் : 4646 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 13 ; மற்றும் மேற்கில் : கி. ச. வீதி. பரப்பளவில் இது, அதன் மீதுள்ள கட்டிடங்களுடனும் மரங்களுடனும் பயிர்களுடனும் வேறெல்லாவற்றுடனும் ஒரு றூட் முப்பத்தைந்து தசம் எட்டு இரண்டு பேர்ச்சுக்களை (0ஏ. 1றூ. 35.82பே.) கொண்டுள்ளது.

மேலேயுள்ள காணி பின்வருவதிலிருந்து ஒரு பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட காணித்துண்டு ஆகவுள்ளது :

மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்திலுள்ள ராய்கம் கோறளையின் உடகஹா பத்துவிலுள்ள நம்பபாணவில் அமைந்துள்ளதும், மீகஹாவத்தவில் தென்மேற்கு எல்லையிலுள்ள காணித்துண்டொன்றென அழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டீ. சிறில் விக்ரமகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000.10.13 ஆந் திகதிய 4646 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் 15 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டு பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கில் : கே. ஜே. ஜயசிங்கவினால் உரிமைகோரப்பட்ட காணித்துண்டம் 17, பணுகல்-கொடெல்லவத்த ; கிழக்கில் : காணித்துண்டம் 14 மற்றும் காணித்துண்டம் 13 ; தெற்கில் : காணித்துண்டம் 14 மற்றும் காணித்துண்டம் 13 ; மற்றும் மேற்கில் : கி. ச. வீதி ; அத்துடன் காணித்துண்டம் 17 மற்றும் 16. பரப்பளவில் இது, அதன் மீதுள்ள கட்டிடங்களுடனும் மரங்களுடனும் பயிர்களுடனும் வேறெல்லாவற்றுடனும் இரண்டு றூட் ஐந்து தசம் நான்கு நான்கு பேர்ச்சுக்களை (0ஏ. 2றூ. 5.44பே.) அல்லது 0.2161 ஹெக்டயார்களைக் கொண்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

4-355/5

---

### இ. அ. நி. கூ. வங்கி

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''பிரியங்க்க மல் ஷாலாவ'' என்ற பெயர் மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் உரிமையாண்மையில் தொழில் கொண்டு நடாத்துகின்ற அநுராதபுரத்தைச் சேர்ந்த திரு. விக்ரம ஆராச்சிகே காமினி ஜயசேக்கர என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ. அ. நி. கூ. வங்கி சார்பில் அநுராதபுரத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். கே. என். ஏ. குரேரா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001, ஒற்றோபர் 17 ஆந் திகதிய 930 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும் 2008, நவெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக மூன்று இலட்சத்து பதினான்காயிரத்து நாநூற்றெழுபத்திரண்டு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 3,14,472.12) கொண்ட தொகையும் 2008, திசெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை இரண்டு இலட்சத்து இருபத்தாறாயிரத்து எழுநூற்றுத்தொண்ணூற்றுநான்கு ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 2,26,794.61) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபது சதவீத (20%) வட்டியும் மேற்சொல்லப்பட்ட 930 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது சொல்லப்பட்ட திரு. விக்ரமஆராச்சிகே காமினி ஜயசேக்கர என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின்

4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட, சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து மூன்று இலட்சத்து பதினான்காயிரத்து நாநூற்றெழுபத்திரண்டு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 3,14,472.12) கொண்ட தொகையும் 2008, திசெம்பர் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை இரண்டு இலட்சத்து இருபத்தாறாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றுநான்கு ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 2,26,794.61) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபது சதவீத (20%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 930 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறி மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

### 930 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

வடமத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுரம் மாவட்டத்தில் கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உத்தியன்குளம் கோறளையில் 231 ஆம் இலக்க கஹட்டகஸ்திகிலிய (கிழக்கு) கிராம அலுவலர் பிரிவில் கஹட்டகஸ்திகிலிய கிராமத்தில் அமைந்துள்ளதும், பின்வரும் எல்லைகளையுடையதுமான அக்காணித்துண்டு அடங்கலும்- வடக்கில் : மஹரூப்பின் காணி ; கிழக்கில் : அரச காடு ; தெற்கில் : லயனல் கட்டுகுருந்தகேயின் காணி ; மேற்கில் : கோன்வெவ வீதி. பரப்பளவில் இது, சொல்லப்பட்ட வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்ட வீதி ஒதுக்கிடத்திலும் அதன் மீதுமான பாதை யுரிமையுடனும் (0ஏ. 2றூ. 0பே.) கொண்டுள்ளது.

இது, உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. வீ. சோமபால என்பவரினால் நிலஅளவையிடப்பட்டு, சொல்லப்பட்ட வரைபடத்தின்படி காணியானது பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது- வடமத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுரம் மாவட்டத்தில் கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரிவில் 231 ஆம் இலக்க கஹட்டகஸ்திகிலிய கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவிலுள்ள உத்தியன்குளம் கோறளையில் கஹட்டகஸ்திகிலியவில் அரச காணியென அழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. வீ. சோமபால என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001, யூலை 4 ஆந் திகதிய 3731 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்ட அக்காணித்துண்டு அடங்கலும்- வடகிழக்கில் : அரச காணி ; தென்கிழக்கில் : லயனல் கட்டுகுருந்தகேயின் காணி ; தென்மேற்கில் : வீதி ; வடமேற்கில் : மஹரூப்பின் காணி. பரப்பளவில் இது, சொல்லப்பட்ட வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட வீதி ஒதுக்கிடத்திலும் அதன் மீதுமான பாதையுரிமையுடனும் அதன் மீதுள்ள கட்டிடங்களுடனும் எல்லா வற்றுடனும் இரண்டு றூட்களை (0ஏ. 2றூ. 0பே.) கொண்டுள்ளதுடன், அநுராதபுரம் காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

4-355/6

---

### ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பேங்கிங் கோர்ப்பரேசன் லிமிட்டெட்

அறவீட்டு நடவடிக்கை - இலங்கை

பின்வரும் தீர்மானம் ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட் பணிப்பாளர்களின் நிறைவேற்றுக் குழுவால் 2009, பெப்புருவரி 23 ஆந் திகதி முறையே நிறைவேற்றப் பட்டது :-

''இலங்கை, ராஜகிரிய, லேக் ட்ரைவ், றோயல் பார்க் இல. A20-06 என்னும் முகவரியைச் சேர்ந்த டில்ஷான் நேரியஸ் ரொஜர் பெர்னாண்டோ என்பவர் இலங்கை கொழும்பு, சேர் பாரொன் ஜயதிலக மாவத்தை, 24 ஆம் இலக்கத்தில் கிளை அலுவலகமொன்றைக் கொண்டுள்ள ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்டின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். டீ. எல். பெரேரா அத்தாட்சிப்படுத்திய 2005, யூன் 29 ஆந் திகதி கொண்ட 2219 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீதான கடனின் பேரில் ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்டிற்கு வருமதியான இதனகத்துப்பின்னர் குறிப்பிடப்படும் பணத்தொகையின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும், மேற்படி கடன்மீது வருமதியான பணத்தின் கொடுப்பனவிற்குப் பிணையாக மேற்படி ஈட்டு முறியின் மூலம் இதற்கான அட்டவணையில் விவரிக்கப்படும் ஆதனமும் வளவுகளும் ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதாதலாலும்,

மேற்படி 2219 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது மேற்படி கடனின் பேரில் மேற்படி டில்ஷான் நேரியஸ் ரொஜர் பெர்னாண்டோ என்பவரிடமிருந்து 2008, திசெம்பர் 14 ஆந் திகதியன்றுள்ளவாறு இப்பொழுது ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்டிற்கு ஒரு கோடியே எட்டு இலட்சத்து இருநூற்று பதினைந்து ரூபா இருபத்தொரு சதமும் (ரூ. 1,08,00,215.21) ஒரு கோடியே எட்டு இலட்சத்து இருநூற்று பதினைந்து ரூபா இருபத்தொரு சதத்தின் மீது (ரூ. 1,08,00,215.21) 2008, திசெம்பர் 15 ஆந் திகதி தொடக்கம் முழுக் கொடுப்பனவு திகதிவரை வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது ஆதலாலும், இப்பணத்தின் கொடுப்பனவில் தவணை தவறப்பட்டுள்ளது. ஆதலாலும்.

ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையின் நிறைவேற்றுக் குழு 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மேற்படி பணிப்பாளர்

சபையின் நிறைவேற்றுக் குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் பின்வருமாறு தீர்மானிக்கின்றது.

" ஒரு கோடியே எட்டு இலட்சத்து இருநூற்று பதினைந்து ரூபா இருபத்தொரு சதத்தையும் (ரூ. 1,08,00,215.21) ஒரு கோடி எட்டு இலட்சத்து இருநூற்று பதினைந்து ரூபா இருபத்தொரு சதத்தின் மீது (ரூ. 1,08,00,215.21) 2008, திசெம்பர் 15 ஆந் திகதி முதல் முழுக் கொடுப்பனவு திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்து மூன்று தசம் ஏழு எட்டு சதவீதப்படி (23.78) வட்டி, விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள் மற்றும் உறப்பட்ட ஏனைய அறவீடுகள் என்பவற்றுடன் சேர்த்து, 2008, திசெம்பர் 15 ஆந் திகதியின் பின்னர் ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்டால் பெறப்பட்ட கொடுப்பனவுகளை (எவையும் பெறப்பட்டிருப்பின்) கழித்து அறவிடுவதற்கான) ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்டிற்கு 2219 ஆம் இலக்க ஈட்டுமுறியினால் ஈடுவைக்கப்பட்டுள்ள இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் ஆதனமும் வளவுகளும் இலங்கை கொழும்பு 5, ஹெவ்லொக் வீதி, 290 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம என்பவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும்."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, அதிகாரி பற்று, கொட்டிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபையின் எல்லைகளுக்குட்பட்ட ஹிம்புட்டான கிராமம் முல்லேரியாவில் அமைந்துள்ளதும் 46/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் கெற்றகெலகஹாவத்த கெற்றகெலகஹாஓவிட்ட மற்றும் அஸ்வெடுமஓவிட்ட என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். பி. ஏ. சாந்த பிரியா பெரேரா தயாரித்த 2003, யூலை 3 ஆந் திகதி கொண்ட 1613 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. டபிள்யூ. குணரத்ன தயாரித்த 2235 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டுகள் A, B, C என்பவற்றின் பகுதிகள் மற்றும் வரைபடம் இல. 2235/1A மற்றும் 1B என்பதில் காட்டப்படும் துண்டு 1B என்பதன் ஒரு பாகம் என்பவற்றின் மறு நிலஅளவையும் ஒன்றிணைப்பும் ஆகும். இதற்கு எல்லைகளாக - வடக்கில் : ஐ. ஏ. டீ. எஸ், எஸ். விஜேரத்ன உரிமை கோரும் காணி, பாரன் திலகானந்த மாவத்தை, மற்றும் குணசேகரவும் ஏனையோரும் உரிமைகோரும் காணி; கிழக்கில் : உடுமுல்ல வீதி, ஜே. சீ. அபேவர்தன, ஏ. ரத்நாயக, கே. கே. சஞ்சீவ ஆகியோர் உரிமைகோரும் காணி, மற்றும் மேற்படி 2235/1A மற்றும் 1B என்னும் வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 1A மற்றும் 1B; தெற்கில் : வீதி, குணசேகரவும் ஏனையோரும் உரிமைகோரும் காணித்துண்டு, எச். எம். கருணாரத்ன மற்றும் பீ. டபிள்யூ. பெரேரா ஆகியோர் உரிமைகோரும் காணி, மேற்படி 2235/1A மற்றும் 1B என்னும் வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 1A; மேற்கில் : வீதி, குணசேகரவும் ஏனையோரும் காணி, ஏ. ரத்நாயக உரிமைகோரும் காணி என்பன அமைந்துள்ளன. மேற்படி 1613 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு நாலு ஏக்கர் மூன்று றூட் (4ஏ. 3றூ. 0பே.) (1.9223 ஹெக்டேயர்). இது கொழும்பு காணிப் பதிவகத்தில் L 100/17 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி 1613 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 என அடையாளமிடப்பட்ட மேற்படி காணித்துண்டு பின்வருமாறும் விவரிக்கப்படுகின்றது :

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, அதிகாரி பற்று, கொட்டிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபையின் எல்லைகளுக்குட்பட்ட ஹிம்புட்டான கிராமம் முல்லேரியாவில் அமைந்துள்ளதும் 46/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் கெற்றகெலகஹாவத்த கெற்றகெலகஹாஓவிட்ட மற்றும் அஸ்வெடுமஓவிட்ட என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். பி. ஏ. எஸ். பெரேரா தயாரித்த 2003, ஓகத்து 4 ஆந் திகதி கொண்ட 1628 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. டபிள்யூ. குணரத்ன தயாரித்த 2235 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்படும் துண்டுகள் A, B, C என்பவற்றின் பகுதிகள் மற்றும் வரைபடம் இல. 2235/1A மற்றும் 1B என்பதில் காட்டப்படும் துண்டு 1B என்பதன் ஒரு பாகம் என்பவற்றின் மறு நிலஅளவையும் ஒன்றிணைப்பும் ஆகும்) இதற்கு எல்லைகளாக - வடக்கில் : ஐ. ஏ. டீ. எஸ், எஸ். விஜேரத்ன உரிமை கோரும் காணி, பாரன் திலகானந்த மாவத்தை, மற்றும் குணசேகரவும் ஏனையோரும் உரிமைகோரும் காணி; கிழக்கில் : உடுமுல்ல வீதி, ஜே. சீ. அபேவர்தன, ஏ. ரத்நாயக, கே. கே. சஞ்சீவ ஆகியோர் உரிமைகோரும் காணி, மற்றும் மேற்படி 2235/1A மற்றும் 1B என்னும் வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 1A ; தெற்கில் : வீதி, குணசேகரவும் ஏனையோரும் உரிமைகோரும் காணி, எச். எம். கருணாரத்ன மற்றும் பீ. டபிள்யூ. பெரேரா ஆகியோர் உரிமைகோரும் காணி, மேற்படி 2235/1A மற்றும் 1B என்னும் வரைபடத்தில் காட்டப்படும் துண்டு 1A; மேற்கில் : வீதி, குணசேகரவும் ஏனையோரும் காணி, உரிமைகோரும் ஏ. ரத்நாயக உரிமைகோரும் காணி என்பன அமைந்துள்ளன. மேற்படி 1628 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு நாலு ஏக்கர் மூன்று றூட் (4ஏ. 3றூ. 0பே.) (1.9223 ஹெக்டேயர்).

பின்வரும் காணியின் மீதான வழியுரிமையுடன் சேர்த்து :-

1. மேற்படி ஹிம்புட்டான கிராமம் முல்லேரியாவில் அமைந்துள்ளதும் கெற்றகெலகஹாவத்த கெற்றகெலகஹாஓவிட்ட மற்றும் அஸ்வெடுமஓவிட்ட என அழைக்கப்படுவதுமான காணியின் மேற்படி 2235 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு D எனக் காட்டப்படும் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (15 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்டது). இதற்கு எல்லைகளாக - வடக்கில் : பொல்வத்த ஜுவானிஸ் பெரேராவின் காணி ; கிழக்கில் : கல்வன சந்தியிலிருந்து தலங்கம செல்லும் முல்லேரியாவ ஆசுபத்திரி வீதி ; தெற்கில் : 2235 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டுகள் B, C, 1 ; மேற்கில் : துண்டு E (12 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்டது) என்பன அமைந்துள்ளன. 2235 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பதினெட்டு தசம் ஐந்து சைவர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 18.50பே.). இது கொழும்பு காணிப் பதிவகத்தில் L 81/159 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி ஹிம்புட்டான கிராமம் முல்லேரியாவில் அமைந்துள்ளதும் கெற்றகெலகஹாவத்த கெற்றகெலகஹாஓவிட்ட மற்றும் அஸ்வெடுமஓவிட்ட என அழைக்கப்படுவதுமான காணியின் மேற்படி 2235 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு E எனக் காட்டப்படும் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (12 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்டது). இதற்கு எல்லைகளாக - வடக்கில் : துண்டு D (12 அடி அகலப் பாதைக்கென ஒதுக்கப்பட்டது) ; கிழக்கில் : இதே காணியின் துண்டு A ; தெற்கில் : காணியிலிருந்து வீடுகளுக்குச் செல்லும் பாதை ; மேற்கில் : இதே காணியின் துண்டு A என்பன அமைந்துள்ளன. 2235 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன்

பரப்பளவு பதினாறு தசம் ஒன்று சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றா. 16.10பே.). இது கொழும்பு காணிப் பதிவகத்தில் L 81/ 160 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வில்லியன் எஸ். எம். டேம்,
ஹொங்கொங் அன்ட் ஷங்காய்
பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்டின்
பணிப்பாளர்கள் சபையின் நிறைவேற்றுக் குழுவின்
பிரதிச் செயலாளர்.

4-356

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

பிலியந்தல சித்தமுல்ல, சமன் மாவத்தை, இல. 1 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. நெலிகமகே சரத் தம்மிக பெரேரா மற்றும் திரு. நெலிகமகே தயாசிறி பந்து பெரேரா (சுபர்கொம் கம்யூற்றர் சிஸ்டத்தின் பங்குதாரர்கள்) ஆகியோரின் கடன் பொறுப்புகளுக்காக ஈடுவைத்த ஆதனங்கள்

2008, நவெம்பர் 4 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்த தாவது :-

"1. பிரசித்த நொத்தாரிசு ஜே. எம். பீ. டபிள்யூ. திலக்கரத்ன அத்தாட்சிப்படுத்திய 2007.05.17 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 559 மற்றும் பிரசித்த நொத்தாரிசு கலா தி அல்விஸ் அத்தாட்சிப்படுத்திய 2002.11.21 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1539 ஆகியவற்றால் காப்பளித்ததன் பேரில் இல. 1, சமன் மாவத்தை, சித்தமுல்ல, பிலியந்தல என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. நெலிகமகே சரத் தம்மிக பெரேரா மற்றும் திரு. நெலிகமகே தயாசிறி பந்து பெரேரா (சுப்பர்கொம் கம்பியூற்றர் சிஸ்டத்தின் பங்குதாரர்கள்) ஆகியோருக்கு வங்கி வழங்கிய மேலதிகப்பற்று ஐம்பது இலட்சம் ரூபா (ரூ. 50,00,000) பணத்தை அவர்கள் திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளனர். 2008.08.25 இல் உள்ளவாறு மேலதிகப்பற்றின் பேரில் வட்டியுடன் அறுபத்தொரு இலட்சத்து அறுபத்துநான்காயிரத்து அறுபத்தொன்பது ரூபா பதினைந்து சதம் (ரூ. 61,64,069.15) அத்துடன் நாற்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றையாயிரத்து ஐநூற்றிருபத்தெட்டு ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 49,95,528.19) ஆண்டுக்கு இருபத்தாறு (26%) சதவீதத்தில் 2008.08.26 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் நெலிகமகே சரத் தம்மிக பெரேரா மற்றும் நெலிகமகே தயாசிறி பந்து பெரேரா ஆகியோருக்கு வழங்கிய மேற்குறிப்பிட்ட மேலதிகப்பற்றின் பேரில் இலங்கை வங்கிக்கு முழுவதுமாக வருமதியாக உள்ளது.

மேலதிகப்பற்றின் பேரில் 2008.08.25 ஆந் திகதி உள்ளவாறு அறுபத்தொரு இலட்சத்து அறுபத்துநான்காயிரத்து அறுபத்தொன்பது ரூபா பதினைந்து சதமும் (ரூ. 61,64,069.15) அத்துடன் நாற்பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றையாயிரத்து ஐநூற்றிருபத்தெட்டு ரூபா பத்தொன்பது சதத்தில் (ரூ. 49,95,528.19) ஆண்டுக்கு இருபத்தாறு (26%) வீதத்தில் 2008.08.26 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணைகளில் விபரித்த மேற்குறிப்பிட்ட முறி இல. 1539 மற்றும் 559 ஆகியவற்றின்கீழ் இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை அல்லது சொத்துக்களை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மகரகம மேற்றரக் கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### காணிச்சொத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, உடுகஹபற்றுவில் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுக்குள் (வட்டரெக்க உப அலுவலகம்) சித்தமுல்ல கிராமத்தில் அமைந்த 'தானாயம்கொடல்ல முகலான' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ஏ. சிறிசேன தயாரித்த 1999, மாச்சு 20 ஆந் திகதியிட்ட அளவை வரைபடம் இல. 337 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கில் : வரைபடம் இல. 335 இல் துண்டு 19 உம் (வரைபடம் இல. 335 இல் காணி உறுதியின்படி துண்டு 20) றோட்டும் ; கிழக்கில் : துண்டு 2 உம் ; தெற்கில் : எஸ். தர்மசிறி தேவஹெட்டிகேயின் காணியும் (எஸ். தர்மசிறி தேவஹெட்டிகேயின் காணி உறுதியின்படி) ; மேற்கில் : பிரதான றோட்டும் எல்லைகளாகக் கொண்டு குறிப்பிட்ட வரைபடம் இல. 337 இன்படி இருபத்தொரு பேர்ச்சுகள் (0ஏ. 0றா. 21பே.) விஸ்தீரணமுடைய காணியும் அத்துடன் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் என் 307/173 இல் பதிவுசெய்யப்பட்டது.

சீ. ஜீ. என். பிரேமதிலக,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
மகரகம.

4-415

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2008, செத்தெம்பர் 29 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்த தாவது –

"1. பிரசித்த நொத்தாரிசு திரு. சரத் ஜீ. மானவடு அத்தாட்சிப்படுத்திய 2006.12.21 ஆந் திகதியிட்ட முறி 2425 இன் பேரில் இல. 51, பட்டிஹேன தெவிநுவர என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. பட்டபெந்தி மத்துமகே விமலசேன மற்றும் திரு. பட்டபெந்தி மத்துமகே நிரங்க றுவன் ஆகியோரிடமிருந்து முதலும் 2008.08.07 ஆந்

திகதிவரை வட்டியும் ஆறு இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூற்றெண்பத்தொரு ரூபா இரண்டு சதம் (ரூ. 6,50,881.02) அத்துடன் ஐந்து இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து ஐம்பத்தொன்பது ரூபா இருபத்தெட்டு சதத்தில் (ரூ. 5,94,059.28) ஆண்டுக்கு 13% த்தில் 2008.08.08 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட முறி இல. 2425 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஆறு இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூற்றெண் பத்தொரு ரூபா இரண்டு சதமும் (ரூ. 6,50,881.02) அத்துடன் 2008.08.08 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணைகளில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 39, வில்பிரெட் குணசேகர மாவத்தை, கோட்டை, மாத்தறை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. எம். எச். பத்மானந்த சிறிவர்தனவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவும் அதன் திருத்தங்களுக் கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி தெவிநுவர கிளை முகாமை யாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப் படுகின்றது.''

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், தெவிநுவர பிரதேச சபை செயலகத்துள் வெல்லபொடபற்றுவில் தெவிநுவர வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் பட்டியஹேன கிராமத்தில் அமைந்த பட்டியஹேன என அழைக்கப்படும் காணி அளவையாளர் நாயகம் அதிகாரமளித்த வரைபடம் இல. மார/4/(மார 245) இல் விபரித்த துண்டு இல. 95 என அடையாளமிட்ட காணித்துண்டு- வடக்கில் : வரைபடம் இல. மார/245 இல் துண்டு 83 உம் ; கிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. மார/245 இல் துண்டு இல. 96 மற்றும் 97 உம் ; தெற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. மார/245 இல் துண்டு இல. 84 உம் (றோட்) ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. மார/245 இல் துண்டு இல. 84 உம் (றோட்) எல்லைகளாகக் கொண்டு இருபத்தொரு தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 21.5பே.) விஸ்தீரணமுடைய காணியாகும். இது மாத்தறை காணிப்பதிவகத்தில் L. D. O. B9/175 இல் பதிவுசெய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட துண்டு இல. 95 உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. பீ. சுனில் தயாரித்த 2005, நவெம்பர் 8 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 1122 இன்படி பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது :-

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெல்லபொடபற்றுவில் தெவிநுவர வடக்கில் அமைந்த பட்டியஹேன என அழைக்கப்படும் காணியின் வரைபடம் இல. 1122 இல் விபரித்த துண்டு இல. 95 என அடையாளமிட்ட காணித்துண்டு- வடக்கில் : வரைபடம் இல. மார/245 இல் துண்டு இல. 83 உம் ; கிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. மார/245 இல் துண்டு இல. 96 மற்றும் 97 உம் ; தெற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. மார/245 இல் துண்டு இல. 80 (பொது றோட்) ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. மார/245 இல் துண்டு இல. 84 உம் (றோட்) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1122 இன்படி இருபத்தொன்று தசம் ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 21.5பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

எம். எம். சந்திரபால,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
தெவிநுவர.

4-417

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2009.01.22 இல் நடைபெற்ற கூட்டமொன்றல் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகனமதாகவும் தீர்மானித்த தாவது -

''பிரசித்த நொத்தாரிசு திரு. எஸ். சீ. ஜயவர்த்தன அத்தாட்சிப்படுத்திய 2002.11.14 ஆந் திகதியிட்ட முறி இல. 25360 இன் பேரில் இல. 509/2C, கோனஹேன ரோட், கடவத்தை என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. வெலிவிட்ட விதானலாகே சம்சன் கல்யாண பெரேரா வீரவர்தன வெலிவிட்ட என்பவரிடமிருந்து கூட்டமாகவும் தனித்தனியாகவும் முதலும் 2008.10.28 வரை வட்டியும் இருபத்து நான்கு இலட்சத்து எழுபதாயிரத்து எழுநூற்று எண்பத்தாறு ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 24,70,786.79) அத்துடன் பதின்மூன்று இலட்சத்து மூவாயிரத்து ஐநூற்று முப்பத்தைந்து ரூபா நான்கு சதம் மீது (ரூ. 13,03,535.04) ஆண்டுக்கு 25% (இருபத்தைந்து) வீதத்தில் 2008.10.29 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட முறி இல. 25360 மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட இருபத்து நான்கு இலட்சத்து எழுபதாயிரத்து எழுநூற்று எண்பத்தாறு ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 24,70,786.79) அத்துடன் 2008.10.29 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடுவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 24, டொறிங்ரன் ரோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரமவுக்கு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பகமூன கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப் படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, அதிகாரிபற்றுவில் மஹர உப அலுவலக நாரங்வல பிரதேச சபை எல்லைகளுள் ரண்முத்துகல கிராமத்தில் அமைந்த அம்பகஹவத்த,

மில்லகஹவத்தயும், கஜுகஹதெனியவும் என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. எட்வேர்ட் தயாரித்த 2002, சனவரி 02 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2735 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : வரைபடம் இல. 117/2000 இல் துண்டு CIG மற்றும் CIF ; கிழக்கில் : துண்டு 2 உம் ; தெற்கில் : ஜீ. எம். செனவிரத்னவின் காணியும் ; மேற்கில் : ரண்முத்துகல ரோட்டும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2735 இன்படி இருபத்தைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 25பே.) விஸ்தீரணமுடையது. இது கம்பஹா காணிப் பதிவகத்தில் C604/21 இல் பதிவு செய்யப்பட்டது.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, அதிகாரிபற்றுவில் மஹர பிரதேச சபை எல்லைகளுள் (இல. 02 நாரங்வல உப அலுவலகம்) ரம்முத்துகல கிராமத்தில் அமைந்த ''அம்பகஹவத்த', மில்லகஹவத்தயும், கஜுகஹதெனியவும் என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. எட்வேர்ட் தயாரித்த 2002, சனவரி 02 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2735 இல் விபரித்த துண்டு 3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : வரைபடம் இல. 117/2000 இல் 20 அடி அகல ரோட் துண்டு CID உம் ; கிழக்கில் : வரைபடம் இல. 117/2000 இல் துண்டு CID உம் வரைபடம் இல. 24/2001 இல் துண்டு CIAY யும் ; தெற்கில் : ஜீ. எம். செவனிரத்னவின் காணியும் ; மேற்கில் : துண்டு 2 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2735 இன்படி முப்பத்தைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 35பே.) விஸ்தீரணமுடையது. இது கம்பஹா காணிப் பதிவகத்தில் C604/20 இல் பதிவு செய்யப்பட்டது. அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2735 இல் ஒதுக்கப்பட்ட 20 அடி அகலப்பாதை மீதான வழிஉரிமையும் ஆகும். இக்காணி பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. பீ. எம். லக்ஷ்மன் அத்தாட்சிப்படுத்திய 2002, சனவரி 09 ஆந் திகதியிட்ட உறுதி இல. 842 மற்றும் பிரசித்த நொத்தாரிசு எம். என். பெரேரா அத்தாட்சிப்படுத்திய 2002, பெப்புருவரி 01 ஆந் திகதியிட்ட விடுவிப்பு உறுதி இல. 3501 ஆகியவற்றின் கீழ் சொந்தமாக உள்ளது.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

டி. எம். டி. ஆர். எஸ். எஸ். ஜயவர்தன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பகமுன கிளை.

4-418

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2009.02.26 இல் நடைபெற்ற கூட்டமொன்றல் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகனமதாகவும் தீர்மானித்த தாவது -

''பிரசித்த நொத்தாரிசு திரு. ஏ. சீ. எஸ். ஹமீட் அத்தாட்சிப்படுத்திய 2008.08.11 ஆந் திகதியிட்ட முறி இல. 1007 இன் பேரில் உபுல்தெனிய, கனதர, ரத்மலே என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ஹேரத் முதியான்சேலாகே பியதாச மற்றும் திரு. ஹேரத் முதியான்சேலாகே சுனந்த தர்மசிறி ஆகியோரிடமிருந்து கூட்டாகவும் தனித்தனியாகவும் முதலும் 2009.02.02 வரை வட்டியும் மூன்று இலட்சத்து மூவாயிரத்து முந்நூற்று அறுபத்து நான்கு ரூபா எண்பத்தெட்டு சதங்களும் (ரூ. 3,03,364.88) அத்துடன் இரண்டு இலட்சம் ரூபாவில் (ரூ. 2,00,000) ஆண்டுக்கு 25.5% (இருபத்தைந்து தசம் ஐந்து) வீதத்தில் 2009.02.-3 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட முறி இல. 1007 இன் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட மூன்று இலட்சத்து மூவாயிரத்து முந்நூற்று அறுபத்து நான்கு ரூபா எண்பத்தெட்டு சதமும் (ரூ. 3,03,364.88) அத்துடன் 2009.02.03 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு ரெம்பல் ரோட், குளியாபிட்டிய என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஜே. அல்பியஸ் பெரேராவுக்கு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கஹட்டகஸ்திகிலிய கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப் படுகின்றது.''

### அட்டவணை

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரிவில் கனதர கோரளை ரத்மலே, 199 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் ரத்மலே கிராமத்தில் அமைந்த ''ஸ்டேட்லாண்ட்'' என அழைக்கப்படும் காணித்துண்டு வடக்கில் : பி. பி. விஜேரத்னவின் காணியும் ; கிழக்கில் : மெஸ்ஸாகஹபுவெவ தொட்டி ஒதுக்கமும் ; தெற்கில் : பி. பீ. சுனில் செனவிரத்னவின் காணியும் ; மேற்கில் : கலென்பிந்துனுவெவ வரை பிரதான ரோட்டும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது அநுராதபுரம் மாவட்ட காணிப்பதிவகத்தில் ஆ:L.D.O. 248/202 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காணி அண்மைய அளவை வரைபடம் இல. 3422 இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ரத்மலே கிராமத்தில் அமைந்த ''ஸ்டேட்லாண்ட்'' அல்லது ''இடம'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. வீ. சோமபால தயாரித்த 1999.10.22 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3422 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட காணித்துண்டு வடக்கில் : பி. பி. விஜேரத்னவின் காணியும் ; கிழக்கில் : மெஸ்ஸாகஹப்புவெவ தொட்டி ஒதுக்கமும் ; தெற்கில் : பி. பி. சுனில் செனவிரத்னவின் காணியும் ; மேற்கில் : ரோட்டும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

திரு. கே. அப்புஹாமி,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கஹட்டகஸ்திகிலிய கிளை.

4-419

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2008.11.28 இல் நடைபெற்ற கூட்டமொன்றல் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகனமதாகவும் தீர்மானித்த தாவது :-

"1. பிரசித்த நொத்தாரிசு டி. வீரசூரிய அத்தாட்சிப்படுத்திய 2006.08.15 ஆந் திகதியிட்ட முறி இல. 784 இன் பேரில் கமகே குரூப் நிறுவனத்தின் பங்குதாரர்களாகிய ஹோமாகம கொடகம, சம்பத் உயன, இல. 151/2 ஐச் சேர்ந்த திரு. கலிதுவ விதான கமகே வசந்த துமிந்த, கொட்டாவ, மத்தேகொட, பொல்கஸ்ஒவிட்ட, நாமல் உயன, இல. 127/23 ஐச் சேர்ந்த திரு. கலிதுவ விதான கமகே பியதாச ஆகியோரிடமிருந்து முதலும் 2008.09.03 ஆந் திகதி வரை வட்டியும் கடன் மீது பன்னிரண்டு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து அறுநூற்று நாற்பத்தெட்டு ரூபா இருபத்தொன்பது சதமும் (ரூ. 12,84,648.29) அத்துடன் கடன் மீது பதினொரு இலட்சத்து அறுபத்தையாயிரத்து ஐநூற்று முப்பது ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூ. 11,65,530.69) ஆண்டுக்கு 13% (பதின்மூன்று) வீதத்தில் 2008.09.04 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேலே (1) இல் குறிப்பிட்ட தொகையையும் அத்துடன் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு மேற்குறிப்பிட்ட ஈட்டு முறி இல. 784 ஆல் காப்பளித்து ஈடுவைக்கப்பட்ட சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விகாரை மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் T& H ஏலத்தினருக்கு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப் படுகின்றது."

#### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை, பல்லேபற்றுவில் கொடகம கிராமத்தில் அமைந்த அவிசாவளை ரோட், தற்சமயம் வரிமதிப்பிலக்கம் 615 (பகுதி) தற்சமயம் 611 என்னும் இடத்தில் அமைந்த கட்டிடத்துடனான காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். விக்கிரமரத்ன தயாரித்த 2002, நவெம்பர் 24 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 825 இல் விபரித்த துண்டு 30B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : அதே வரைபடம் இல. 825 இல் விபரித்த துண்டு 30A உம் ; கிழக்கில் : ரோட்டும் ; தெற்கில் : ஹைலெவல் ரோட்டும் ; மேற்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஜே. நானயக்கார தயாரித்த 1980, மே 28 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2145 இல் விபரித்த துண்டு 31 ஆம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 825 இன்படி பதினெட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 18பே.) சைபர் தசம் சைபர் நான்கு ஐந்து ஐந்து ஹெக்டேயர்கள் விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் G 1409/150A இல் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் வழி உரிமையும் ஆகும்.-

மேற்குறிப்பிட்ட கொடகம கிராமத்தில் அமைந்த மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 825 இல் விபரித்த துண்டு 30A என அடையாளமிட்ட (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு C ரோட்டும் ; கிழக்கில் : ரோட்டும் ; தெற்கில் : துண்டு 30B உம் ; மேற்கில் : துண்டு 31 உம் எல்லைகளாக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 825 இன்படி தசம் ஏழு சைவர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. .70பே.) சைபர் தசம் சைபர் சைபர் ஒன்று எட்டு ஹெக்டேயர்கள் (0.6018) விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் G 1409/150B இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

சி. டபிள்யூ. வெலகெதர,
பிரதம முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
நுகேகொடை

4-420

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2009.01.22 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்த தாவது –

"1. பிரசித்த நொத்தாரிசு திரு. ஏ. எம். திருவாதவூரன் அத்தாட்சிப்படுத்திய 2005.10.27 ஆந் திகதிட்ட ஆரம்ப ஈட்டுமுறி இல. 1140 மற்றும் 2007.08.23 ஆந் திகதியிட்ட மேலதிக ஈட்டுமுறி இல. 1602 ஆகியவற்றின் பேரில் இல. 116/2, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. நல்லதம்பி மகாலிங்கம் மற்றும் திருமதி பாமினி மகாலிங்கம் ஆகியோரிடமிருந்து தனித்தனியாகவும் கூட்டாகவும் முதலும் 2008.11.27 வரை வட்டியும் பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து ஐநூற்றைம்பத்தொன்பது ரூபா முப்பத்துமூன்று சதம் (ரூ. 13,52,559.33) மற்றும் பதினேழு இலட்சத்து பதின்மூவாயிரத்து அறுநூற்றெழுபது ரூபா எண்பத்தைந்து சதம் (ரூ. 17,13,670.85) அத்துடன் பதினொரு இலட்சத்து ஒன்பது சதம் (ரூ. 11,00,009) பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து இருநூறு ரூபா (ரூ. 13,59,200) முறையே ஆண்டுக்கு இருபத்தொன்பது (29%) வீதத்தில் 2008.11.28 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட முறி இலக்கங்கள் 1140 மற்றும் 1602 ஆகியவற்றின் மீது வருமதியாகவுள்ள மேற்குறிப்பிட்ட பதின்மூன்று இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து ஐநூற்றைம்பத்தொன்பது ரூபா முப்பத்துமூன்று சதமும் (ரூ. 13,52,559.33) மற்றும் பதினேழு இலட்சத்து பதின்மூவாயிரத்து அறுநூற்றெழுபது ரூபா எண்பத்தைந்து சதமும் (ரூ. 17,13,670.85) அத்துடன் 2008.11.28 தொடக்கம் விற்பனைத் திகதிவரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின்கீழ்

அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 692, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. கே. பீ. பாலகிருஷ்ணன் என்பவருக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவிற்கும் அதன் திருத்தங்களுக்கமையவும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

### அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டத்திலும் பிரிவிலும் நல்லூர் பிரிவில் திருநெல்வேலி இறைவரி உத்தியோகத்தர் பிரிவில் 'அருமகலட்டி' என அழைக்கப்படும் மற்றும் பெயருடைய ஆறரை லாச்சம் (6 1/2 லாச்சம் வி. சி.) விஸ்தீரணமுடைய காணி. இந்த ஆறரை லாச்சங்களிலிருந்து (லாச்சம் 6 1/2 வி. சி.) பிரிக்கப்பட்ட ஒரு பகுதி வடக்குப் பக்கத்தில் மூன்றரை லாச்சங்கள் (3 1/2 லாச்சங்கள் வி. சி.) ஏற்கனவே சீதனம் வழங்கப்பட்டுள்ளதுடன், தெற்குப் பக்கமாக காணியின் மீதிப்பாகம் மூன்று லாச்சங்கள் (03 லாச்சங்கள் வி. சி.) விஸ்தீரணமுடைய காணியும் வீடும் பயிரிடப்பட்ட மற்றும் இயற்கைப் பயிர்களும் வடக்கு எல்லையில் காணப்படும் கிணற்றின் பங்கும் வழி, வாய்க்கால் பாவிப்புரித்தும் ஆகும். இக்காணி, யாழ்ப்பாணம் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ரத்னராஜா வரைந்த 2005.06.20 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 1064 இன்கீழ் துண்டு 1 என விபரித்துள்ளதுடன் மூன்று லாச்சங்களும் பதினாறு தசம் எட்டு ஒன்று குழிகளும் (3 லாச்சங்களும் வி. சி. 16.81 குழிகளும்) விஸ்தீரணமுடையது. இது நல்லூர் பிரதேச சபை எல்லைகளுள் வட்டாரம் இல. 9 இல் யாழ்ப்பாணம் ஆடியபாதம் வீதி, வரிமதிப்பிலக்கம் 116/2 ஐக் கொண்டது. இக்காணியின் எல்லைகளாவன- கிழக்கில் : பீ. சேனாதிராஜாவின் ஆதனமும் ; வடக்கில் : கணேசனின் மனைவி குமுதினியின் ஆதனமும் ; மேற்கில் : ஒழுங்கையும் ; தெற்கில் : பீ. சேனாதிராஜாவின் ஆதனமும் எல்லைகளாகக் கொண்டு இவ்வெல்லைகளுள் அடங்கும் சகலதும் ஆகும். இக்காணி யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் தொகுதி டீ 356 பக்கம் 150 இல் பதிவுசெய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ஈ. பிரேமராஜன்,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
திருநெல்வேலி.

4-421

---

### மக்கள் வங்கி – பெல்மதுல்ல கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம்*

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 19.12.2008 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''மொரபொலவத்தகே கிசோ குமார், மொரபொலவத்த ஹுலவாலின்கே சேனரத்ன வில்லியா இருவரும் மக்கள் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஜனத் ஜயவர்தன அத்தாட்சிப்படுத்திய 2005.12.06 ஆந் திகதிகொண்ட 1869 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர். ஆதலால் இப்பொழுது மேற்படி ஈட்டுமுறியின் மீது ஒரு இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து நூற்றாறு ரூபா இருபத்துமூன்று சதம் (ரூ. 1,91,106.23) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் ஒரு இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து நூற்றாறு ரூபா இருபத்துமூன்று சதத்தையும் (ரூ. 1,91,106.23) அதன் மீது 2008.04.14 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 18% ப்படி மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ஔ (29எல்) என்னும் பிரிவின்கீழ் அறவிடற்பாலதான பணங்களையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 1426 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஏ. எஸ். லியனகே என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், கொடகாவெல பிரதேச செயலாளரின் பிரிவிற்குட்பட்ட அட்டகலன் கோறளை, பன்னில் பற்று புங்கிரிய கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளதும் நியங்கமலே ஹேன்யாய என அழைக்கப்படுவதுமான காணியின் 6 ஆம் இலக்க வெளிக்களத் தாளிலும் 35657 ஆம் இலக்க வரைபடத்தில் 2 ஆம் இலக்க மேலதிகக் கோட்டுப் படத்திலும் துண்டு 88-2/2 எனக் காட்டப்படும் காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடம், பயிர்ச்செய்கை மற்றும் அனைத்தையும் சேர்த்து. இதற்கு எல்லைகளாக- வடக்கில் : துண்டு 88-1/2 ; கிழக்கில் : துண்டு 66 ; தெற்கில் : துண்டு 91 ; மேற்கில் : துண்டு 87 என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு சைபர் தசம் இரண்டு சைபர் இரண்டு ஹெக்டேயர் (0.202 ஹெக்டேயர்). இக்காணி இரத்தினபுரி மாவட்ட காணிப்பதிவகத்தில் ஜயபூமி கா. அ. 17/403 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்,
(சபரகமுவ வலயம்).

மக்கள் வங்கி,
சப்பிரகமுவ வலய அலுவலகம்,
புதிய நகர்,
இரத்தினபுரி.

4-441

**மக்கள் வங்கி**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2008.11.28 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*"மக்கள் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு பீ. பீ. நாணாயக்கார என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, மே 08 ஆந் திகதிய 5161 ஆம் இலக்கம்கொண்ட ஈட்டுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவுகளின் தவணைப்பணம் மாபா பண்டாரலாகே சமன் குமார மற்றும் மாபா பண்டாரலாகே பலவர்தன பண்டா என்பவர்களால் செலுத்தத்தவறியுள்ளபடியால் சொல்லப்பட்ட இலக்கம் 5161 ஐக் கொண்ட ஈட்டுமுறியின் மீது ஒரு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து தொளாயிரத்தைம்பத்து நான்கு ரூபா இருபது சதம் (ரூ. 1,79,954.20) பணத்தொகை இப்போது மக்கள் வங்கிக்குச் செலுத்தவேண்டிய பாக்கியாகவும் வருமதியாகவும் உள்ளது. ஆதலால், சொல்லப்பட்ட ஒரு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து தொளாயிரத்தைம்பத்துநான்கு ரூபா இருபது சதம் (ரூ. 1,79,954.20) கொண்ட பணத்தொகையையும் அத்துடன் சொல்லப்பட்ட ஒரு இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து தொளாயிரத்தைம்பத்துநான்கு ரூபா இருபது சதம் (ரூ. 1,79,954.20) கொண்ட பணத்தொகை மீது 2008.07.20 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்துநான்கு தசம் ஐந்து சதவீத (24.5%) மேலதிக வட்டியுடனும் அத்துடன் சொல்லப்பட்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் என்னும் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய ஏனைய பணங்கள் மற்றும் கட்டணங்கள் மேலும் ஏலவிற்பனைத் திகதிவரை கொடுப்பனவு எவையும் பெற்றிருப்பின் அதனைக் கழித்து சொல்லப்பட்ட பணத்தொகைகளை அறவிடுவதற்காக பதுளையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. டபிள்யூ. ஜயதிலக என்பவரால் சொல்லப்பட்ட இல. 5161 ஈட்டுமுறியினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆனத்தையும் மற்றும் அதன் சுற்றுப்புறத்தையும் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் தனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது."*

**ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விவரணம்**

*ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பசறைப் பிரிவு பட்டிபொல கோரளைக்குள் லுணுகலை அத்தனகொல்லையில் அமைந்துள்ள லிந்தகும்புரவத்த எனும் காணியின் ஒரு பகுதியின் எல்லைகள் - வடக்கு : பிட்டத்தகும்புரேவத்தயின் மரவேலி ; கிழக்கு : வி. சி. பாதை மற்றும் மரவேலி ; தெற்கு : மடமேயிக்குச் செல்லும் பாதை மற்றும் உடுதுரே நீரோடை ; மேற்கு : உடுதுரே நீரோடை மற்றும் போகஹ கொடே கல்வெட்டிய ஆகிய எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) பரப்பளவுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், விளைச்சல்கள் உட்பட அனைத்துடனுமாகும். இது பதுளை மாவட்டக் காணிப்பதிவு அலுவலகத்தில் பீ32/ 194 இன்கீழ் பதியப்பட்டுள்ளது.*

*முன்சொல்லப்பட்ட காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. சமரக்கொடி என்பவர் தயாரித்த 2007.01.18 ஆந் திகதிய 6011ஏ ஆம் இலக்க அளவை வரைபில் தற்போது கீழ்க்காட்டப்பட்டுள்ளபடி விவரிக்கப்பட்டுள்ளது :*

*ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பசறைப் பிரிவு பட்டிபொல கோரளைக்குள் அத்தனகொல்லையில் அமைந்துள்ள லிந்தகும்புரவத்த எனும் பிரித்தொதுக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட சொல்லப்பட்ட இலக்கம் 6011ஏ ஆம் வரைபில் துண்டு 1 ஆக அடையாளமிடப்பட்ட காணிப்பகுதியின் எல்லைகள் - வடக்கு : பிட்டஹகும்புரே வத்தையைப் பிரிக்கும் மரவேலி ; கிழக்கு : அடிப்பாதை ; தெற்கு : அடிப்பாதை மற்றும் உடுதுரே நீரோடை ; மேற்கு : உடுதுரே நீரோடை மற்றும் போகஹ கொடேவத்தயைப் பிரிக்கும் கல்வேலி ஆகிய எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) பரப்பளவுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், விளைச்சல்கள் உட்பட அனைத்துடனுமாகும்.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

வலய உதவிப் பொது முகாமையாளர்
(ஊவா வலயம்).

மக்கள் வங்கி,
வலய அலுவலகம்,
இல. 24, ஆர். எச். குணவர்த்தன மாவத்தை,
பதுளை.

*4-445*

---

**மக்கள் வங்கி — பத்தேகம**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2007.10.26 ஆந் திகதி கீழே தரப்பட்டிருக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறியத்தருகிறது :*

*"காலி சட்டத்தரணியும் பிரசித்திபெற்ற நொத்தாரிசுமான ரதம்பலகமகே துல்மினி ஷுனாரி என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்டதும் 2003.03.31 ஆந் திகதிய 538 ஆம் இலக்க ஈட்டுமுறியின்கீழ் கொடுப்பனவில் பிடிய கும்புரே கெதர எலெக்ஸ்ஸேன்டர் சேதுங்க ராஜபக்ச என்பவர் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் என்பதால் இப்பொழுது எட்டு இலட்சத்து பத்தாயிரத்து அறுநூற்றெட்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 8,10,608.90) மக்கள் வங்கிக்கு வருமதியாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளதால் 2007.07.15 ஆந் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு 17% ப்படி எட்டு இலட்சத்து பத்தாயிரத்து அறுநூற்றெட்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 8,10,608.90) மீது ஏலவிற்பனைத் திகதிவரை வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின்*

29எல் பிரிவின்கீழ் அறவிடப்படவேண்டிய பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து எட்டு இலட்சத்து பத்தாயிரத்து அறுநூற்றெட்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 8,10,608.90) அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 538 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டம், ககபடபத்துவ (தெற்கு), அம்பேகம (திவிதுரே) யில் அமைந்துள்ள ஹகுருகேவத்த, ஹகுருகொடபத்த மற்றும் ஹகுரு கெபெத்த என்ற காணியில் துண்டு இலக்கம் 3 அளக்கப்பட்ட துண்டு இலக்கம் 3ஏ1 (3A1) மீண்டும் அளக்கப்பட்ட 3ஏ 1ஏ (3A 1A) என்ற காணித்துண்டுக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜீ. டி. யூ. கருணாரத்ன என்பவரின் 2001.12.25 ஆந் திகதிய இலக்கம் 1632/ 2001 என்ற வரைபடத்தின் பிரகாரம் எல்லைகள் - வடக்கு : படபலயில் இருந்து பத்தேகம வரைக்கும் செல்லும் பிரதான வீதியும் இந்தக் காணியின் துண்டு இலக்கம் 1 உம் ; கிழக்குக்கு : இலக்கம் 1632/ 2001 என்ற வரைபடத்தில் காண்பிக்கப்படும் துண்டு இலக்கம் 3ஏ 1பி (3A 1B) உம் துண்டு இலக்கம் 3சீ (3C) (பாதைக்காக வேறாக்கப்பட்ட பகுதி) உம் ; மேற்குக்கு : இந்தக் காணியிலேயே துண்டு இலக்கம் 1 உம் மேலே குறிப்பிட்ட இலக்கம் 1632/ 2001 என்ற வரைபடத்தில் காண்பிக்கப்படும் இலக்கம் 3ஏ 1பி உம் ஆகும். இந்த எல்லைகளுக்குள் இருக்கும் இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) விசாலமுடைய காணியும் அதிலுள்ள கட்டிடங்கள் மரம், மட்டைகளும் உட்பட அனைத்தும் ஆகும்.

இலக்கம் 3சீ துண்டு வீதியாகப் பயன்படுத்த உரிமை உண்டு. (பாதைக்காக வேறாக்கப்பட்டுள்ளது.)

மேலே குறிப்பிட்ட 3ஏ 1ஏ (3A 1A) என்ற காணித்துண்டு கீழ்க்குறிப்பிடப்படும் காணியில் இருந்து அளக்கப்பட்ட துண்டாகையால் மாற்றுப் பதிவின் மூலம் ஒன்றுசேர்ப்பது நல்லதாகும்.

மேலே குறிப்பிடும் அம்பேகமயில் அமைந்துள்ள ஹகுருகே வத்த, ஹகுருகோட பெத்த மற்றும் ஹகுருகே பெத்த என்ற காணித்துண்டு இலக்கம் 3 அளக்கப்பட்ட துண்டு இலக்கம் 3ஏ1 (3A1) எனும் காணித்துண்டுக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஜீ. டி. யூ. கருணாரத்ன என்பவரின் 1998.06.27 ஆந் திகதிய இலக்கம் 3182 என்ற வரைபடத்தின் பிரகாரம் எல்லைகள் - வடக்குக்கு : இந்தக் காணியின் துண்டு இலக்கம் 1 மற்றும் படபலயில் இருந்து பத்தேகமக்குச் செல்லும் பிரதான வீதியும் ; கிழக்குக்கு : படபலயில் இருந்து பத்தேகமவுக்குச் செல்லும் பிரதான வீதியும் மற்றும் இக்காணித் துண்டின் துண்டு இலக்கம் 3சீ (3C) (பாதைக்காக வேறாக்கப்பட்ட பகுதி) ; தெற்குக்கு : துண்டு இலக்கம் 3பீ (3B) மற்றும் துண்டு இலக்கம் 3சீ (3C) (பாதைக்காக வேறாக்கப்பட்ட பகுதி) ; மேற்குக்கு : இந்தக் காணியின் துண்டு இலக்கம் 1 உம் இந்த எல்லைக்குள் இருக்கும் ஒரு ஏக்கர் இருபத்துநான்கு பேர்ச்சஸ் (1ஏ. 0றூ. 24பே.) பரப்பளவுடைய காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரம், மட்டைகள் மற்றும் அனைத்தும் ஆகும். இக்காணி காலி மாவட்ட காணிப்பதிவகத்தில் இலக்கம் எச் (H)112/297 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டு மேலே குறிப்பிட்ட காணிக்கு இணைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்சன் வீதி,
காலி.

4-447

---

**மக்கள் வங்கி - தல்கஸ்வல**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2008.02.19 ஆந் திகதி பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''காலி பிரசித்த நொத்தாரிசு அஜன்தா கபுகமகே என்பவரால் 2006.05.22 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 670 என்ற ஈட்டுமுறியின் பிரகாரம் கொடுப்பனவில் காரியவசம் மடகட கமகே மஹேந்திர இந்திரஜித் காரியவசம் மடகட கமகே கருணாதாச என்பவர்கள் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின் மீது பதின்மூன்று இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து நூற்றுமுப்பத்தைந்து ரூபா பதினாறு சதம் (ரூ. 13,22,135.16) பணம் மக்கள் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால் 2008.06.30 ஆந் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு 20% ப்படி பதின்மூன்று இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து நூற்றுமுப்பத்தைந்து ரூபா பதினாறு சதம் (ரூ. 13,22,135.16) பணம் மீது ஏலவிற்பனைத் திகதிவரை வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் பிரிவின்கீழ் அறவிடப்படவேண்டிய பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து பதின்மூன்று இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து நூற்றுமுப்பத்தைந்து ரூபா பதினாறு சதம் (ரூ. 13,22,135.16) பணம் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 670 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டம், வலல்லாவிட்ட கோரளே, பென்தொட, வெய்ஹேன கிராமத்தில் அமைந்திருக்கும் மீகமுவாகொட அடஹவுல்ஹேன மானான அல்லது பாலுகொடஹேன மற்றும் மீகமுவாகொட கெலே என்ற காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் ஈ. த இஸட். குணவர்தன என்பவரால் 1955.01.21 ஆந் திகதி அளந்து தயாரித்த இலக்கம் 3548 என்ற வரைபடத்திற்கு அமைய பிரித்து வேறாக்கிய துண்டு இலக்கம் 3 இன் 3பி என்ற துண்டுக்கான எல்லைகள் – வடக்கிற்கு : இக்காணியின் 03ஏ என்ற துண்டும் ; கிழக்கிற்கு : பிரதான வீதிக்காக வேறாக்கிய துண்டும் ; தெற்கிற்கு : அரசாங்கக் காணி மற்றும் வயலும் ; மேற்கிற்கு : வயலும் இதன் எல்லைகளாகும். இந்த எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் நான்கு ஏக்கர் ஒரு றூட் ஆறு தசம் ஆறு பேர்ச்சஸ் (4ஏ. 1றூ. 6.6பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரம், மட்டைகள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும். இக்காணி பலபிட்டிய காணிப்பதிவகத்தில் இலக்கம் பி62/ 180 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட காணி மீண்டும் அளக்கப்பட்டுள்ளது.

தென் மாகாணம், காலி மாவட்டம், வலல்லாவிட கோரலே, பென்தொட, வெய்ஹேன கிராமத்தில் அமைந்துள்ள மீகமுவாகொட அடஹவுல்ஹேன மானான அல்லது பாலுகொடஹேன மற்றும் மீகமுவாகொடகெலே என்ற காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் மகசே ஆரியசேன என்பவரால் 2005.12.12 ஆந் திகதி அளந்து தயாரித்த இலக்கம் 2787 என்ற வரைபடத்தின் பிரகாரம் அளந்து வேறாக்கிய துண்டு இலக்கம் 3 இன் 3பி என்ற துண்டுக்கான எல்லைகள் – வடக்கிற்கு : இக்காணியின் 3ஏ என்ற துண்டும் ; கிழக்கிற்கு : பிரதான வீதி மற்றும் பிரதான வீதிக்காக வேறாக்கிய காணியும் ; தெற்கிற்கு : அரசாங்க காணி இப்பொழுது தனியார் காணி மற்றும் தனியார் வயலும் ; மேற்கிற்கு : அரசாங்க மற்றும் தனியார் வயலும் இதன் எல்லைகளாகும். இந்த எல்லைக்குள் அமைந்திருக்கும் நான்கு ஏக்கர் ஒரு றூட் ஆறு தசம் ஆறு பேர்ச்சஸ் (4ஏ. 1றூ. 6.6பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரம், மட்டைகள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும். இக்காணி பலபிட்டிய காணிப்பதிவகத்தில் இலக்கம் பி517/ 57 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்சன் வீதி,
காலி.

4-448

---

**மக்கள் வங்கி**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2008.12.19 ஆந் திகதி பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :

"காலி பிரசித்த நொத்தாரிசு அஜன்தா கபுகமகே என்பவரால் 2006.04.27 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 623 என்ற ஈட்டுமுறியின் பிரகாரம் கொடுப்பனவில் லியனகமகே தயானந்த, சந்திரலதா ஜயந்தி திசாநாயக்க என்பவர்கள் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின்கீழ் இருபத்தொன்பது இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து எண்ணூற்றுதொண்ணூற்றொரு ரூபா எழுபத்தெட்டு சதம் (29,29,891.78) பணம் மக்கள் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால் 2008.05.28 ஆந் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு 20% ப்படி இருபத்தொன்பது இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து எண்ணூற்றுதொண்ணூற்றொரு ரூபா எழுபத்தெட்டு சதம் (29,29,891.78) பணம் மீது ஏலவிற்பனைத் திகதிவரை வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் பிரிவின்கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து இருபத்தொன்பது இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து எண்ணூற்றுதொண்ணூற்றொரு ரூபா எழுபத்தெட்டு சதம் (29,29,891.78) பணம் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 623 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டம், பென்தொட்ட வலல்லாவிட்ட கோரளே, நியாகமயில் அமைந்துள்ள கிரிமெடிகொட, பொல்லேவிட என்ற காணிக்கு இலக்கம் ஏ என்ற துண்டுக்காக அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் ஜீ. பி. எஸ். பந்துல சில்வா என்பவரால் 1993.09.27 ஆந் திகதி அளந்து தயாரித்த இலக்கம் 20/ 93 என்ற வரைபடத்தின் பிரகாரம் எல்லைகள் – வடக்கிற்கு : எஹலமலே இரவால என்ற காணியும் ; கிழக்கிற்கு : எஹலமலே இரவால மற்றும் கந்தமலே இன்துர வயலும் ; தெற்கிற்கு : கந்தமலே இன்துர வயலும், கந்தமலே இன்துர ஓவிட மற்றும் கிராமத்தில் இருந்து பிரதான வீதி வரை செல்லும் வீதியும் ; மேற்கிற்கு : கிரிமெடிகொட வயலும் மற்றும் வீதியும் இதன் எல்லைகளாகும்.

இந்த நான்கு எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் இரண்டு ஏக்கர் இரண்டு றூட் பதினைந்து பேர்ச்சஸ் (2ஏ. 2றூ. 15பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரம், மட்டைகள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும். இக்காணி பலபிட்டிய காணிப்பதிவகத்தில் இலக்கம் பி 377/ 238 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்சன் வீதி,
காலி.

4-449

## மக்கள் வங்கி-பத்தேகம

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2008.03.31 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :*

*"காலி பிரசித்த நொத்தாரிசு எம். ஜீ. சி. அரோசினி என்பவரால் 2005.03.03 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தியதும் 134 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது வருமதியான கொடுப்பனவில் ஹவுபே லியனகே ஸுனில் என்பவர் தவணை தவறியுள்ளார் என்பதால் இப்பொழுது மேற்படி முறியின் மீது இரண்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து இருநூற்றிருபத்துநான்கு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 2,37,224.12) மக்கள் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ளதால் 2007.04.28 ஆந் திகதியிலிருந்து ஓர் வருடத்துக்கு 19.25% ப்படி இரண்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து இருநூற்றிருபத்துநான்கு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 2,37,224.12) மீது ஏலவிற்பனைத் திகதிவரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 எல் (29எல்) பிரிவின்கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து இரண்டு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து இருநூற்றிருபத்துநான்கு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 2,37,224.12) அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 134 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."*

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், காலி மாவட்டம், கங்கபட பத்துவே, கனேகம வடக்கு (இப்பொழுது வவுலகல) யில் அமைந்துள்ள பரகஹவத்த அந்தா கும்புர என்ற காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் என். சி. விஜேவிக்கிரம என்பவரால் 1999.05.13 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 00890 என்ற வரைபடத்தின் பிரகாரம் துண்டு இலக்கம் 1 அளந்த இலக்கம் 1ஏ (1ஏ) என்ற துண்டுக்கான எல்லைகள்– வடக்கிற்கு : ஹிக்கடுவையில் இருந்த பத்தேகம வரை செல்லும் பிரதான வீதியும் ; கிழக்கிற்கு : இக்காணியின் இலக்கம் 1பீ (1பீ) என்ற துண்டம் ; தெற்கிற்கு : எல மற்றும் பரககஹவத்த 2 என்ற துண்டும் ; மேற்கிற்கு : இக்காணியின் இலக்கம் 1 மற்றும் 2 என்ற துண்டுகளும் இக்காணியின் எல்லைகளாகும். இக்காணியின் எல்லைகளுக்குள் அமைந்துள்ள இருபத்தைந்து தசம் ஆறு நான்கு மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 25.643பே.) விசாலமுடைய காணியும் காணியில் அமைந்துள்ள மரம், மட்டைகள், பழவகை, பயிர்கள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும். இக்காணி காலி காணிப்பதிவகத்தில் இலக்கம் எச்217/ 118 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்சன் வீதி,
காலி.

4-450

---

## மக்கள் வங்கி-ஹிக்கடுவை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2008.08.05 ஆந் திகதி பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :*

*"காலி பிரசித்த நொத்தாரிசு அஜன்தா கபுகமகே என்பவரால் 2006.09.21 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 909 என்ற ஈட்டுமுறியின் பிரகாரம் வருமதியான கொடுப்பனவில் குமாரகே கபில நிஷாந்த பிரனாந்து மற்றும் வெதிஸிங்ஹ ஆரச்சிகே லானி பிரியங்கா என்பவர்கள் தவணை தவறியுள்ளனர். அதனால் இப்பொழுது மேற்படி முறியின் மீது தொண்ணூற்று நான்காயிரத்து தொளாயிரத்தெண் பத்தெட்டு ரூபா இருபத்து நான்கு சதம் (ரூ. 94,988.24) பணம் மக்கள் வங்கிக்கு வருமதியாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால், 2007.12.21 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு 17.5% வீதப்படி தொண்ணூற்று நான்காயிரத்து தொளாயிரத்தெண்பத்தெட்டு ரூபா இருபத்துநான்கு சதம் (ரூ. 94,988.24) மீது ஏலவிற்பனைத் திகதிவரை மேலும் வட்டியையும், மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் என்னும் பிரிவின்கீழ் அறவிடப்படவேண்டிய பணத்தையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து தொண்ணூற்றுநான்காயிரத்து தொளாயிரத்தெண்பத்தெட்டு ரூபா இருபத்துநான்கு சதம் (ரூ. 94,988.24) பணம் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் இலக்கம் 909 ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."*

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், காலி மாவட்டம், கங்கபட பத்துவே தெற்கு பத்தேகம பிரதேச சபை எல்லைக்குள் கெரதேவலயில் (தற்பொழுது

கனேகம என்ற பெயரால் அறிமுகம் செய்யப்படும்) அமைந்துள்ள தியகடித்தேகொடவத்தை என்ற காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் குஸுமன் சிரிவர்தன என்பவரால் 2006.01.01 ஆந் திகதி அளந்து தயாரித்த இல. 2/2006 என்ற வரைபடத்தின் பிரகாரம் இலக்கம் 98 என்ற துண்டுக்கான எல்லைகள்- வடக்கிற்கு : துண்டு இலக்கம் 97 உம் ; கிழக்கிற்கு : துண்டு இலக்கம் 93 உம் ; தெற்கிற்கு : துண்டு இலக்கம் 99 உம் ; மேற்கிற்கு : இக்காணியின் துண்டு இலக்கம் 1 இன் பகுதியும் அதன் எல்லைகளாகும். இந்த எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் பன்னிரண்டு தசம் சைபர் எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12.08பே.) விசாலம் கொண்ட இக்காணியினுள் அமைந்திருக்கும் மரம், மட்டைகள் உட்பட அனைத்தும் ஆகும்.

இந்த இலக்கம் 2/2006 என்ற வரைபடத்திற்கு அமைய பிரித்து வேறாக்கிய துண்டு இலக்கம் 98 கீழேயுள்ள விபரத்தின்படி மீண்டும் அளந்தது ஆகும் :-

மேலே குறிப்பிட்ட கெரதேவலயில் (தற்பொழுது கனேகம என்ற பெயரால் அறிமுகம் செய்யப்படும்) அமைந்துள்ள தியகடித்தேகொடவத்தை என்ற காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் குஸுமன் சிரிவர்தன என்பவரால் 2002.03.07 ஆந் திகதி அளந்து தயாரித்த இல. 113/2002 என்ற வரைபடத்தின் பிரகாரம் இலக்கம் 98 என்ற துண்டுக்கான எல்லைகள்- வடக்கிற்கு : துண்டு இலக்கம் 97 உம் ; கிழக்கிற்கு : துண்டு இலக்கம் 93 உம் ; தெற்கிற்கு : துண்டு இலக்கம் 99 உம் ; மேற்கிற்கு : இக்காணியின் துண்டு இலக்கம் 1 இன் பகுதியும் இந்த எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் பன்னிரண்டு தசம் சைபர் எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12.08பே.) விசாலம் கொண்ட இக்காணியினுள் அமைந்திருக்கும் மரம், மட்டைகள் உட்பட அனைத்தும் ஆகும். இக்காணி எச். 222/134 இன் கீழ் காலி மாவட்டக் காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கீழே குறிப்பிடும் விபரத்திற்கு அமைய வீதிக்காக வேறாக்கப்பட்ட காணியினால் போக்குவரத்து செய்வதற்கு உரிமையும் உண்டு :-

மேலே குறிப்பிட்ட கெரதேவலயில் (தற்பொழுது கனேகம) அமைந்துள்ள தியகடித்தேகொடவத்தை என்ற காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் குஸுமன் சிரிவர்தன என்பவரால் 2002.03.07 ஆந் திகதி அளந்து தயாரித்த இல. 113/2002 என்ற வரைபடத்தின் பிரகாரம் இலக்கம் 93 என்ற துண்டுக்கான எல்லைகள்- வடக்கிற்கு : துண்டு இலக்கம் 1 உம் ; கிழக்கிற்கு : வீதியும் ; தெற்கிற்கு : பிரதான வீதியும் ; மேற்கிற்கு : துண்டு இலக்கம் 13, 88-91, 94 1/2, 94 2/2, 95-99 மற்றும் 105-115 இதன் எல்லைகளாகும்.

இந்த எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் முப்பத்தாறு தசம் இரண்டு சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 36.20பே.) விசாலம் கொண்ட காணியாகும்.

இக்காணி காலி மாவட்ட காணிப்பதிவகத்தில் எச். 197/236 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்ஸன் வீதி,
காலி.

4-451

## தேசிய சேமிப்பு வங்கி

கடன் இல. : 603080335752

1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் 2008.04.30 ஆந் திகதியன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :

"308/எப், கலஹிட்டியாவ தெற்கு கணேமுல்லையைச் சேர்ந்த திருமதி காகொட ஆராய்ச்சிகே தமரா குமாரி என்பவரை ஈடுவைத்துள்ளவராகக் கொண்டு, தேசிய சேமிப்பு வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஏ. சம்பா அமரசிங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.08.08 ஆந் திகதிய 5492 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது 2008.05.08 ஆந் திகதியன்றுள்ளவாறாக, பதின்மூன்று இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து முந்நூற்றுத் தொண்ணூற்றுமூன்று ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 13,42,393.52) ஐக் கொண்ட தொகை, இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கிக்கு வருமதியாகவும் சேருமதியாகவும் இருக்கின்றதாதலால், சொல்லப்பட்ட 5492 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அறவிடற்பாலனவான விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், ஏனைய இறுப்பனவுகள் மற்றும் பணங்கள் என்பவற்றுடன் சேர்த்து, சொல்லப்பட்ட பதின்மூன்று இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து முந்நூற்றுத்தொண்ணூற்றுமூன்று ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 13,42,393.52) ஐக் கொண்ட தொகையை 08.05.2008 தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டு ஒன்றுக்கு (12.5% இலும்) வட்டியுடன் அறவிடுவதற்காக உரிமம்பெற்ற ஏலதாரர் சொக்மன் அன்ட் சமரவீர மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கிறது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை அதிகாரப்பற்றுவின் நாரன்வல உப கந்தோர் மற்றும் மஹர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கிரிலவல கிராமத்தில் அமைந்துள்ள பட்டடோம்ப கஹவத்த மற்றும் மில்லகஹவத்த என அழைக்கப்படும் காணியும் கட்டிடங்களும் அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாகவும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்கவினால் ஆக்கப்பட்ட 2005, யூலை 08 ஆந் திகதியிட்ட 737/2005 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 'ஏ' என அடையாளமிடப்பட்டதும்- வடக்கில் : கீர்த்தி பண்டாரவின் காணியையும் ; கிழக்கில் : ஆர். பீ. ரூபசிங்கவின் காணியையும் ; தெற்கில் : ஆர். பி. ரூபசிங்கவின் காணியையும் ; மேற்கில் : பாதையையும் எல்லைகளாகக் கொண்டதும் சொல்லப்பட்ட 737/2005 வரைபடத்திற்கமைய இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.)

விஸ்தீரணமுள்ளதும் கம்பஹா காணிப்பதிவகத்தில் சீ 648/264 (குறிப்பு பகுதியில்) பதிவுசெய்யப்பட்டுள்ளதுமான துண்டு ஏ எனும் பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும்.

முகாமையாளர்-கடன்.

தேசிய சேமிப்பு வங்கி,
இல. 255, காலி வீதி,
கொழும்பு 03.

4-455

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(கொட்டாவ கிளை) — துமந்த ஷியாமலி சேனரத் பரணயாப்பா

ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2009, பெப்புருவரி மாதம் நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் :-

"துமந்த ஷியாமலி சேனரத் பரணயாப்பா கடப்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பி. டீ. ரி. தர்மதிலகவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, செத்தெம்பர் 22 ஆந் திகதியிடப்பட்ட 1017 ஆம் இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2008, ஓகத்த 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது ஆறு இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூற்றிருபது ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 6,50,820.57) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1017 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ஆறு இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூற்றிருபது ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 6,50,820.57) கொண்ட பணத்தொகையை 2008, செத்தெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஆர். எஸ். மஹாநாமவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவகம் கோறளை, பள்ளேபற்று, ஹோமகம பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட மக்கும்புற கிராமத்தில் உள்ள கொஸ்கஹலந்த மறுபெயர் தெல்கஹவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டிடங்கள் மற்றும் எல்லாம் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஹெற்றிகே யினால் தயாரிக்கப்பட்ட 2001, ஏப்பிறல் 23 ஆந் திகதியிடப்பட்ட 3063 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு ஏ4 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள்- வடக்கு : வரைபட இலக்கம் 316 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 3 ; கிழக்கு : காணித்துண்டு 4பி ; தெற்கு : வரைபட இலக்கம் 316 இல் உள்ள காணித்துண்டு 5 ; மேற்கு : 12 அடி அகலமான வீதி (வரைபட இலக்கம் 316 இல் உள்ள காணித்துண்டு 10) அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 3063 இற்கு அமைவானதும் ஹோமாகம காணிப்பதிவகத்தில் ஜீ 1313/39 என்ற தலைப்பின்கீழ் பதிவுசெய்யப்பட்ட பத்து தசம் இரண்டு சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10.20பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

4-473/1

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(குருணாகல் கிளை) — மத்தும நைடலகே கிரி நைடி மறுபெயர் ஜயகொடி ஆராச்சிலாகே நிமால் ஜயகொடி மற்றும் ஜயகொடி ஆராச்சிகே தம்மிக்க ஜயகொடி

ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2009, பெப்புருவரி மாதம் நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

''மத்தும நைடலகே கிரி நைடி மறுபெயர் ஜயகொடி ஆராச்சிலாகே நிமால் ஜயகொடி மற்றும் ஜயகொடி ஆராச்சிலாகே தம்மிக்க ஜயகொடி கடற்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி சார்பில் குருநாகலை பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹேவபத்திரனவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005 ஒக்டோபர் 27 ஆந் திகதியிடப்பட்ட 1214 இலக்க முறி மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2008, ஓகத்த 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக, ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறி மீது மூன்று இலட்சத்து எழுபத்து எட்டாயிரத்து தொளாயிரத்து தொண்நூற்று இரண்டு ரூபா எட்டு சதம் (ரூபா 3,78,992.08) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 1214 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 3,78,992.08 கொண்ட

பணத்தொகையை 2008, நவெம்பர் 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகிய வற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஆர். எஸ். மஹாநாமவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருணாகலை மாவட்டம், வள்கம் பற்று கோறள, தேவாமெதி ஹற்பற்றுவில் உள்ள வாரியபொல பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட கலவெவ கிராமத்தில், போகஹ முலவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் எல்லாம் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஆரியதாச அத்துப்பத்துவினால் தயாரிக்கப்பட்ட 2005 ஒகஸ்ட் 28 ஆந் திகதியிடப்பட்ட 136/ 2005 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு 1 என அடையாளமிடப் பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் - வடக்கு : ரணேய்டின் வழித்தோன்றல்களின் காணி ; கிழக்கு : அதே காணியின் மிகுதியான பகுதி ; தெற்கு : வோல்டர் சில்வாவின் காணி ; மேற்கு : பிரதான வீதி அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 136/2005 இற்கு அமைவானதும் குருணாகலை மாவட்ட காணிப் பதிவகத்தில் ட 1142/ 243 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு ரூட் மற்றும் இருபது பேர்ச்சுகள் (0ஏ. 01ரூ.20பே) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

4-473/ 2

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(மினுவாங்கொட கிளை) - சமிந்த யஹாத்துகொட

ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2009, பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

சமிந்த யஹாத்துகொட கடற்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கி. யு. ரீ. திசேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இரு முறிகளான 2004 பெப்புருவரி 20 ஆந் திகதியிடப்பட்ட 3666 இலக்க முறி மற்றும் 2005 செப்டம்பர் 10 ஆந் திகதியிடப்பட்ட 4786 இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2008, ஜுன் 30 ஆந் திகதியின்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது நாற்பத்து இரண்டு இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து எழுநூற்று எண்பத்து ஆறு ரூபா பன்னிரண்டு சதம் (ரூபா 4,277,786.12) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 3666 மற்றும் 4786 ஆம் இலக்க முறி மூலம் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 4,277,786.12 பணத்தொகையை 2008, ஜுலை 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் ஆர். எஸ். மஹாநாமவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர, கங்கவத்தை கோறளவின் ஒகஸ்டாவத்தையில் உள்ள ஒகஸ்டாவத்தை என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் சீ. பாலம்கும்புரவினால், தயாரிக்கப்பட்ட 1985 ஜுலை 2 ஆம் திகதியிடப்பட்ட நில அளவை வரைபடம் 1597 ஆம் இலக்கத்தில் காட்டப்பட்டுள்ளதுமான காணித்துண்டு 47 எனக அடையாளமிடப் பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் வடக்கு : பேராதனையில் இருந்து போவலவிற்குச் செல்லும் பெருந்தெருக்கள் திணைக்கள வீதி அத்துடன் வீதிக்கான ஒடுக்கீடு ; கிழக்கு : நிலஅளவை வரைபடம் 591 இலக்கத்தில் உள்ள காணித்துண்டு 76 க்குச் செல்லக்கூடிய 20 அடி அகலமான பாதை ; தெற்கு : நில அளவை வரைபட இலக்கம் 591 இல் உள்ள காணித்துண்டு 53 இன் அதே காணியின் பகுதி ; மேற்கு : நில அளவை வரைபடம் 591 இலக்கத்தில் உள்ள காணித்துண்டு 46 அதே காணியின் பகுதி அத்துடன், மேற்குறிப்பிடப்பட்டுள்ள வரைபட இலக்கம் 1597 இற்கு அமைவான இருபத்தி மூன்று தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0ரூ.23.5பே) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

4-473/ 3

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(பண்டாரவளை கிளை) – பராக்கும்பராகே மறுபெயர் பராக்கும்ராஜாகே விஜேந்திரபால

ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 2009, பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டமொன்றில்

விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப் பட்டது :-

